6th March 1961]

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) Yes, Sir. Kurichi Panchayat was constituted into a municipality with effect from the 1st October 1958.

(*b*) The Kurichi Municipality was abolished with effect from 1st October 1960. The attention of the member is in this connection invited to the paper placed on the table of the House on the subject (sent by post on 1st November 1960).

SRI N. MARUDACHALAM: கோவையில் குறிச்சி பஞ்சாயத்தை முனிசிபாலிட்டி ஆக்கியபிறகு மறுபடியும் ஒரு வருஷத்திற்கு ஸ்பெஷல் ஆபீசர் போட்டு வேலை செய்யப்பட்டு வந்தது. முனிசிபாலிட்டியை மறுபடியும் பஞ்சாயத்து ஆக்க வேண்டுமென்று காங்கிரஸ் பிரமுகர்கள் மகஜர் கொடுத்தார்களா? நேரடியாக மந்திரியிடம் ஒரு தூதுகோஷ்டி வந்து இதை மறுபடியும் பஞ்சாயத்து போர்டாக ஆக்கவேண்டுமென்று சொன்னார்களா? அதன் பேரில் என்ன செய்யப்பட்டது?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இந்தப் பஞ்சாயத்தை முனிசிபாலிட்டி ஆக்கவேண்டுமென்று நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருந்தது. தேர்தல் நடக்கவில்லை. அதே சமயத்தில் வேறு சில பகுதிகளையும் சேர்த்து முனிசிபாலிட்டி ஆக அமைக்க வேண்டிய நிலையில், அப்பொழுது அந்த கிராமத்திலுள்ளவர்கள் நாங்கள் பஞ்சாயத்தாகவே இருக்கிறோம் என்று சொன்னதினால் அது கைவிடப்பட்டது.

SRI V. SUBBIAH: பஞ்சாயத்துக்குள்ள ஜனத்தொகையும் வருமானமும் உள்ள எத்தனை பஞ்சாயத்துக்கள் முனிசிபாலிட்டியாக ஆகாமல் இருந்துக்கொண்டிருக்கின்றன. அவைகள் எப்பொழுது ஆக்கப்படும்?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

Cine artistes

* 594 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Madras Film Enquiry Committee has submitted its report to the Government; and

(*b*) whether it has recommended to the Government the setting up of a High Power Committee to draw up a code of conduct for film artistes?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No.

(*b*) Does not arise.

SRI N. K. PALANISAMI : ஆபாசப் படங்களைக் கட்டுப்படுத்தவும், இன்னும் இந்தத் தொழிலிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளிகளை ரெகுலரைஸ் செய்யவும் சர்க்கார் ஒரு கமிட்டி போட்டுப் பரிசீலனை செய்வார்களா?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[6th March 1961

THE HON. SRI C. SUBRAMANIAM: ஆபாசப் படங்களைப் பரிசீலனை செய்வதற்கு இப்பொழுது சென்சார் போர்டு இருக்கிறது. அவர்கள் சரியாக பணியாற்றி வருகிறார்கள் என்றே நம்புகிறேன். தொழிலாளிகளைப் பொறுத்த வரையிலும் பாக்டரி சட்டம், மற்றும் பல சட்டங்கள் இருக்கின்றன.

SRI A. A. RASHEED : May I know whether the Government have appointed any committee to enquire into this matter?

THE HON. SRI C. SUBRAMANIAM : The Government have not appointed a committee as such but a committee consisting of the various interests concerned in the film industry has been constituted and they are going into the whole matter and I expect a report will be submitted to the Government soon.

SRI K. VINAYAKAM : When the Hon. Minister for Finance took part in a function where this kind of committee was being sponsored, was it represented to him that top-ranking artistes of the film industry have been giving incessant trouble to the producers by not coming in time, not keeping up punctuality and such other things and if so, to ward off such difficulties, was a committee appointed at the instance of the Hon. Minister for Finance?

MR. SPEAKER : I do not know how it is relevant to the main question. But if the Hon. Minister for Finance is prepared to answer, I have no objection.

THE HON. SRI C. SUBRAMANIAM : When the Hon. Speaker says that it is not relevant. . . . .

MR. SPEAKER : It is not relevant.

SRI N. K. PALANISAMI: இம்மாதிரி ஒரு கமிட்டி போடப்பட்டிருக்கிறதென்று கனம் மந்திரி அவர்கள் சொன்னார். அந்த கமிட்டி என்னென்ன விஷயங்களைப் பரிசீலனை செய்யும்? அதிகப்படியாகப் பணம் வாங்குவது, குறைந்த சம்பளம் கொடுத்து அதிகப்படியான சம்பளத்திற்கு கையெழுத்து வாங்குவது போன்ற விஷயங்களைப் பரிசீலனை செய்வார்களா?

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் ஸ்ரீ விநயகம் ஆங்கிலத்தில் கேட்ட கேள்வியையே கனம் அங்கத்தினர் தமிழில் கேட்கிறார் (சிரிப்பு).

Assistant Directors of Fisheries

* 595 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Local Administration be pleased to state the number of Assistant Directors of Fisheries that have been posted to Kanyakumari district for the last four years?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : The post was filled up in November 1957 for the first time and 10 persons have held this post since then.